மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிப்காட் நில ஆர்ஜித வேலைகளில் ஈடுபடுகிறது, அதற்குப் பின்னாலே தான் மற்ற நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

சிம்சன் போர்டு டிரக் கம்பெனிக்கு இடம் அளிக்கும் செயற்குறிப்பு.

*வினா எண். 510—திரு. து. புருஷோத்தமன்: மாண்புமிகு தொழில் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) சென்னை அருகில் உள்ள சிம்சன் போர்டு டிரக்கு தொழிற்சாலைக்கென இடம் கேட்டு அரசுக்கு கோரிக்கை வரப் பெற்றுள்ளதா?

(ஆ) ஆம் எனில், அரசின் முடிவென்ன?

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு: (அ) அண்டு (ஆ) திருமழிசையில் உள்ள காலியாயிருந்த நிலம் மற்றும் கொட்டகையை முத்திரையிட்ட டெண்டர் கோரி அதில் கலந்து கொண்ட திருவாளர்கள் சிம்சன் கம்பெனிக்கு ஐந்து வருட காலத்திற்கு மாத வாடகை ரூ. 17,000க்கு 10—9—1979 முதல் தொழில் வணிகத் துறை குத்தகைக்கு விட்டிருக்கிறது.

திரு. து. புருஷோத்தமன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது இருக்கிற சிறிய இடத்திலேயிருந்து பெரிய அளவிலே இடம் வேண்டுமென்று கேட்டு சிம்சன் போர்டு டிரக் கம்பெனியால் மனு செய்யப்பட்டதா என்பதைதான் என் கேள்வியில் மையமாக வைத்து கேட்டேன். வேறு இடத்தை கேட்டு அதிக பரப்பளவில் வேண்டுமென்று மனு செய்யப்பட்டதா என்பதை அறிய விரும்புகிறேன்,

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அது போன்ற கோரிக்கைகள் எதுவும் இப்போது அரசினுடைய கவனத்திற்கு வரவில்லை.

திரு. து. புருஷோத்தமன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது அமைக்கப்படவிருக்கிற அந்த தொழிற்சாலையில் எத்தனை பேர்கள் வேலை செய்கிறார்கள்? நமது நாட்டிலே பஸ், லாரி சேசிஸ்களுக்கு பற்றாக்குறை இருக்கிற காரணத்தால் தமிழ் நாட்டிலே அந்த தொழிற்சாலை உருவாவதற்கு எல்லாவிதமான சலுகைகளும் அளிக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

1982 மார்ச் 15]

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தனிக் கேள்வி போடவும்.

தமிழ்நாடு இரசாயன பொருள்கள் உற்பத்தி நிறுவனத்தால் பெறப்பட்ட கடன்.

*வினா எண் 511—திரு. மெ. ஆண்டி அம்பலம் : மாண்புமிகு தொழில் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாடு இரசாயனப் பொருள்கள் உற்பத்தி கம்பெனி உரிமையாளர் தமிழ்நாடு தொழில் அபிவிருத்தி கார்ப்பரேஷன் TIDCO இடம் ரூ. 17.50 லட்சம் வாங்கி திருப்பிக் கொடுக்காமல் இருப்பது உண்மையா?

(ஆ) மேற்படி தொகையை வசூலிக்க என்ன நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன?

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு: (அ) மற்றும் (ஆ) தமிழ்நாடு இரசாயன பொருள்கள் உற்பத்தி நிறுவனத்தைச் சார்ந்த தனி நபர் எவருக்கும் தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனம் கடன் வழங்கவில்லை. நிறுவனத்தின் முனைவர் என்ற தகுதியில் நிதி நிறுவனங்கள் தேவைக்கு ஏற்பவும், மேலும் இந்திய தொழில் முன்னேற்ற வங்கியின் வரம்புக்கு உட்பட்டு ரூ. 17·50 இலட்சத்தை ''டிட்கோ'' பாதுகாக்கப் படாத கடனாக அளித்துள்ளது. இந்த கடனுக்கு வட்டி ஏதும் வசூலிக்கக்கூடாது என்றும் இந்தியத் தொழில் முன்னேற்ற வங்கியின் உத்தரவு இல்லாமல் திருப்பி பெறக் கூடாது என்றும் மேற்படி வங்கி கூறியிருக்கிறது. ஆகையால் மேற்படி தொகையை வசூலிப்பது என்ற கேள்வி தற்போது எழவில்லை.

விவசாயக் கிணறுகள் வெட்ட ஆதி திராவிடர்களுக்கு அளிக்கப்படும் மானியம்.

*மாண்பு... எண் 512—திரு. க. பாரமலை : மாண்புமிகு ஆதி திரா... ...துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) விவசாய கிணறுகள் வெட்டுவதற்கு அரிசனங்களுக்கு மானியமாக பணம் வழங்குவது நிலவள வங்கிகளிடம் ஒப்படைக்கப்பட்ட பின்பு கடந்த இரண்டு ஆண்டுகளாகவே அந்த திட்டம் நடைமுறைப்படுத்தப்படவில்லை என்பதை அரசு அறியுமா?